




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## பிப்ரவரி - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## பிப்ரவரி - 03.02.2020

We Shine Academy™
guiding you to get through

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @

**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- இந்திய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- நியமனங்கள்








WeShine Academy™

# இந்திய நிகழ்வுகள்

- இந்திய கடற்படை சமீபத்தில் கொல்கத்தாவில் ஒரு தனித்துவமான **கடலோர பாதுகாப்புப் பயிற்சியைத்** தொடங்கியது. **உள்ளூர் சமூகத்திற்கு கடலோர பாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில்** இந்த பயிற்சி மேற்கொள்ளப்பட்டது.
    - இந்தியாவிற்கும் பங்களாதேஷுக்கும் இடையிலான சர்வதேச வர்த்தக நெறிமுறை வழியில் ஹேம்நகர் வரை சுந்தர்பானில் இருந்து இரண்டு கடற்படை படகுகள் கொடியிடப்பட்டன.
    - **செய்தி துளிகள்:**
        - யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய தளங்களின் கீழ் நான்கு சுந்தர்பான்ஸ் பாதுகாக்கப்பட்ட பகுதிகள் பட்டியலிடப்பட்டுள்ளன.
        - இதில் சுந்தர்பன்ஸ் தேசிய பூங்கா, சுந்தர்பன்ஸ் தெற்கு, சுந்தர்பன்ஸ் மேற்கு மற்றும் சுந்தர்பன்ஸ் கிழக்கு ஆகியவை அடங்கும்.

# சர்வதேச நிகழ்வுகள்

- சமீபத்தில் **மேற்கு ஆசிய அமைதித் திட்டமானது அமெரிக்க அதிபர் டிரம்ப்பால் வெளியிடப்பட்டது**.
    - இது இஸ்ரேலியர்களுக்கும் பாலஸ்தீனியர்களுக்கும் இடையில் நிறுத்தப்பட்ட இரு நாட்டுப் பேச்சுவார்த்தைகளை

மீண்டும் தொடரத் திட்டமிட்டுள்ளது.

- இந்தத் திட்டத்தின் படி ஜெருசேலம் ஒன்றிணைந்ததாகவும் இஸ்ரேலின் தலைநகராகவும் இருக்க வேண்டும்
- மேற்குக் கரையில் இஸ்ரேல் தனது சட்டவிரோத குடியேற்றங்கள் எதையும் அகற்றக் கூடாது.
- **செய்தி துளிகள்:**
  - 1967 ஆம் ஆண்டுப் போரில் இஸ்ரேல் நாட்டினால் கைப்பற்றப்பட்ட நகரத்தின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள ஜெருசலேமின் கோயிலான மவுண்ட் /அல் - ஹராம் அல் - ஷெரீப் வளாகத்தைப் பாதுகாக்கப்பட வேண்டும்
  - இணைக்கப்படாத மேற்குக் கரையில் உள்ள பாலஸ்தீனிய பிரதேசங்கள் மற்றும் காசா ஆகியவற்றிற்கு இடையே போக்குவரத்து இணைப்புகள் நிறுவப்பட வேண்டும்.
  - பாலஸ்தீனிய மற்றும் அண்டை அரபு அரசு பொருளாதாரங்களை வலுப்படுத்துவதற்காக 50 பில்லியன் டாலர் முதலீட்டு நிதி உருவாக்கப்பட வேண்டும்.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **தாய்லாந்த ஐடிஎப் சேலஞ்சர் டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் அங்கிதா ரெய்னா சாம்பியன் பட்டம்** வென்றார்

- பிப்ரவரி 2 அன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவில் சோல் பாக்கியட்டை 6-3 7-5 என்ற நேர் செட்களில் வென்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றினார் அங்கிதா
- **செய்தி துளிகள்:**
  - இரட்டையர் இறுதிப் போட்டியில், நெதர்லாந்தின் பிபியன் ஸ்கூ்.ப்ஸுடன் நம்பர் - 1-ம் நிலை வீராங்கனையான அங்கிதா, தாய் வைல்ட் கார்டில் நுழைந்தவர்களான சுபாபிட்ச் குயெரம் மற்றும் மனஞ்சயா சவாங்க்கேவை 6-4, 6-2 என்ற செட் கணக்கில் வீழ்த்தினார்.

- **ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டி** ஆடவர் ஒற்றையர் பிரிவில் **8-ஆவது முறையாக சாம்பியன்** பட்டத்தைக் கைப்பற்றினார் **செர்பிய வீரர் நோவக்ஜோகோவிச்.**
  - டென்னிஸ் உலகின் முதல் கிராண்ட்ஸ்லாம் பந்தயமான ஆஸி. ஓபன் மெல்போர்னில் நடைபெறுகிறது. ஆடவர் ஒற்றையர் பிரிவு இறுதி ஆட்டம் ராட்லேவர் மைதானத்தில் நடைபெற்றது.
  - 16 முறை கிராண்ட்ஸ்லாம் சாம்பியன் ஜோகோவிச்சை எதிர்கொண்டார் உலகின் 5-ஆம் நிலை வீரர் ஆஸ்திரியாவின் டொமினிக்தீம்.
  - 16 முறை கிராண்ட்ஸ்லாம் பட்டங்களை வென்றிருந்த ஜோகோவிச் இந்த வெற்றி மூலம் பெறும் 17-வது சாம்பியன் பட்டமாகும்.
  - **செய்தி துளிகள்:**

- ஆஸி. ஓபன் பட்டத்தை கைப்பற்றியதின் மூலம் ஏடிபி தரவரிசையில் இரண்டாவது இடத்தில் உள்ள ஜோகோவிச், தற்போது மீண்டும் உலகின் நம்பர் ஒன் வீரர் அந்தஸ்தைப் பெற்றுள்ளார். நடால் இரண்டாவது இடத்துக்கு தள்ளப்பட்டார். பெடரர் அதே மூன்றாவது இடத்தில் உள்ளார்.

## நியமனங்கள்

- **ஈராக்கின் புதிய பிரதமராக முகமது தவுபிக் அலாவி என்பவரை அதிபர் பர்ஹாம் சாலி நியமித்துள்ளார்.**
  - முன்னாள் பிரதமர் அடில் அப்துல் மஹ்தி நவம்பர் மாதம் பதவி விலகியதை அடுத்து சுமார் இரண்டு மாதங்களுக்குப் பின் புதிய பிரதமர் தேர்வு செய்யப்பட்டுள்ளார்.
  - ஈராக் அதிபர் பர்ஹாம் சாலி, முன்னாள் தகவல் தொடர்பு துறை அமைச்சரான முகமது தவுபிக் அலாவியைப் புதிய பிரதமராக அறிவித்தார்.
  - **செய்தி துளிகள்:**
    - தொடர் போர்கள், நாட்டின் பொரளாதார சீர்குலைவு, வேலையில்லா திண்டாட்டம், ஊழல் என அரசாங்கத்துக்கு எதிராக ஈராக்கில் கடந்த நான்கு மாதங்களாகப் போராட்டங்கள் அரங்கேறிவருகின்றன.

## திருக்குறள்


We Shine Academy™

**குறள் : 97**

பால்: அறத்துப்பால்

இயல்: இல்லறவியல்

அதிகாரம்: இனியவை கூறல்

**நயன்ஈன்று நன்றி பயக்கும் பயன்ஈன்று**

**பண்பின் தலைப்பிரியாச் சொல்**

**விளக்கம்:** பிறருக்கு நன்மையைக் கொடுத்து, இனிமைப் பண்பிலிருந்து நீங்காத சொல், நேர்மையான வாழ்க்கையையும், நல்வழியில் நடப்பதால் உண்டாகும் பயனையும் கொடுக்கும்

We Shine Academy™